கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/இரண்டாம் அரையாண்டு பொது/சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2016/2017 (நவம்பர்/டிசம்பர் 2019)

# HC/S 2213 The Vedanta School of Hindu Philosophy

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**பகுதி – I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி – II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி – I

01. "அத்வைத வேதாந்தத்தின் அடிப்படைகளைத் தெளிவுபடுத்தும் நூலாக கைவல்ய நவநீதம் விளங்குகின்றது" இக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.

(அ) நூல் கட்டமைப்பு (03 புள்ளிகள்)
(ஆ) நியாயித்தல் உத்திகள் (05 புள்ளிகள்)
(இ) முன்வைக்கும் வாதங்கள் (06 புள்ளிகள்)

02. விசிட்டாத்வைத தத்துவத்தின் அடிப்படைக் கொள்கைகளை மேல்வரும் தலைப்புகளில் பரிசீலிக்குக.

(அ) ஈஸ்வரன் (04 புள்ளிகள்)
(ஆ) சித்து (05 புள்ளிகள்)
(இ) அசித்து (05 புள்ளிகள்)

03. "வைணவ சமய மரபில் தோன்றிய தத்துவங்களுள் மத்துவரின் துவைத வேதாந்தம் முக்கியத்துவம் வாய்ந்தது" இதனை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை ஆராய்க.

(அ) பிரமாணங்கள் (03 புள்ளிகள்)
(ஆ) பேதவாதம் (03 புள்ளிகள்)
(இ) அத்வைத வேதாந்தத்திலிருந்து வேறுபடும் விதம் (08 புள்ளிகள்)

## பகுதி – II

04. "மாயை என்ற அச்சிலேயே அத்வைத வேதாந்தம் சுழல்கின்றது" என்பாரது கூற்றின் பொருத்தப்பாட்டினைப் பரிசீலனை செய்க. (24 புள்ளிகள்)

05. நிம்பாக்கரால் முன்வைக்கப்பட்ட வேதாந்தக் கோட்பாடானது கடவுட் கொள்கைக்கு அதிக முக்கியத்தவமளிப்பதற்கான காரணங்களைத் தெளிவுபடுத்தி அதன் அடிப்படைகளை ஆராய்க. (24 புள்ளிகள்)

06. "வேதாந்த தத்துவத்தின் பரவலாக்கத்தினை இலங்கையிலும் கண்டுகொள்ளலாம்." தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் இக்கூற்றினைப் பரிசீலனை செய்க. (24 புள்ளிகள்)

07. வேதாந்த தத்துவ வளர்ச்சியில் மாண்டூக்கிய காரிகை பெறும் முக்கியத்துவத்தினை ஆராய்க. (24 புள்ளிகள்)

*****